Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 77/2023**

**Deposition of PW.3 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | வெள்ளைச்சாமி | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.05.2026.

( எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் குரும்பபட்டியில் குடியிந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி பிரபாகரனை தெரியும். அவர் எனது ஊர்க்காரர் ஆவார். புகார்தாரர் பொன்ராஜை தெரியும். அவரும் எனது ஊர்காரர் தான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 77/2023**

**Deposition of PW.4 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளமதி | ஜாதி | : | |
| த/பெ | : | பொன்ராஜ் | தொழில் | : | HDFC பேங்க்ல் வேலை |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.05.2026.

( எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் குரும்பபட்டியில் குடியிந்துகொண்டு HDFC பேங்கில் வேலை செய்து வருகிறேன். பிரபாகரன் எனது ஊர்க்காரர். புகார்தாரர் பொன்ராஜ் எனது அப்பா ஆவார். கடந்த 14.09.2022 அன்று எதிரி பிரபாகரன் என்பவரின் பெரியப்பா இறந்துவிட்டார். அவரது உடலை அடக்கம் செய்வதற்காக சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் போது கருப்பண சாமி கோவில் அருகில் எனது அப்பா பொன்ராஜ் நின்றுகொண்டிருந்தார். அப்போது எதிரி பிரபாகரன் என் அப்பாவை ஆபாசமாக பேசி , அறுவாளை எடுத்து வலது புற தோள்பட்டையில் அறுவாளால் வெட்டி காயம் ஏற்படுத்திவிட்டார். சண்டை நடந்ததை பார்த்து சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தேன். என் அப்பாவிற்கு காயம் ஏற்பட்டிருந்தது. சிவமுத்து மற்றும் லட்சுமணன் இருவரும் இருசக்கர வாகனத்தில் என் அப்பாவை கன்னிவாடி காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கிருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு உள்நோயாளியாக என் அப்பா ஒரு வாரம் 5 நாட்கள் சிகிச்சை பெற்றுக்கொண்டார். சம்பவ

இடத்தில் ஊர்க்காரர்கள் நிறைய பேர் இருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை எப்போது விசாரித்தார்கள் என்றால் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சம்பவத்தன்றே விசாரித்தார்கள். உங்கள் அப்பாவை இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றதாக போலிசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால் நியாபகமில்லை. நீங்கள் சம்பவ தேதியில் எங்கு இருந்தீர்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். சத்தம் கேட்டு வந்து பார்த்ததாக சொல்லியுள்ள விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன்.

நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நீங்கள் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் நீங்களே உங்கள் தந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருப்பீர்கள் என்றும், நீங்கள் சம்பவ இடத்தில் இல்லை என்பதால் தான் நீங்கள் அழைத்துச் செல்லவில்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 77/2023**

**Deposition of PW.5 (LW.6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கௌசல்யா | ஜாதி | : | |
| க/பெ | : | முத்துக்குமார் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 35/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.05.2026.

( எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் குரும்பபட்டியில் குடியிந்து வருகிறேன். எதிரி பிரபாகரன் எனது ஊர்க்காரர். புகார்தாரர் பொன்ராஜ் எனது அப்பா. கடந்த 14.09.2022 அன்று மாலை 04.00 மணியைபோல ராமன் என்ற பிரபாகரனின் பெரியப்பா இறந்துவிட்டார். அவரை அடக்கம் செய்வதற்காக எங்கள் தோடத்து வழியாக கொண்டுவந்த போது, அங்கிருந்த கருப்பணசாமி கோவிலில் பிரபாகரன் உட்கார்ந்தார். பழனிச்சாமி என்பவர் இறந்த காரியத்திற்கு வந்துவிட்டு கோவிலில் உட்கார வேண்டாம் என்று கூறினார். அதற்கு பிரபாகரன் அசிங்கமாக பேசி, வேகமாக ஓடிச்சென்று குடம் உடைப்பவர் கையில் இருந்த அறுவாளை வாங்கி உன்னை இன்று வெட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி, என் அப்பாவை பார்த்து வெட்டினார். முதல் வெட்டை என் அப்பா வலது கையால் தடுத்தார். வலது உள்ளங்கையில் காயம் ஏற்பட்டது. எதற்காக வெட்டுகிறாய் என்று என் அப்பா பிரபாகரனிடம் கேட்டதற்கு மீண்டும் அவரை விரட்டிக்கொண்டே சென்று வலது தோள்பட்டையில் 2 முறை ஆழமாக வெட்டினார். மேற்சொன்ன கோவில் பக்கத்தில் உள்ள தோட்டத்தில் எனது

மகனை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். சத்தம் கேட்டபிறகு அந்த இடத்திற்கு சென்று பார்த்தேன். என் அப்பாவை வெட்டியிருந்தார். சிவமுத்து மற்றும் லட்சுமணன் இருவரும் இருசக்கர வாகனத்தில் கன்னிவாடி காவல்நிலையம் சென்று அங்கிருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் அண்ணனும், தம்பியும் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் உங்கள் அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருப்பார்கள் என்றால் சரிதான். உங்கள் அப்பாவை உங்கள் அண்ணனோ, தம்பியோ மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் கோவிலுக்கு அருகில் உள்ள தோட்டத்தில் உங்கள் குழந்தையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்ததை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன்.

நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில் நீங்கள் சம்பவ இடத்தில் இல்லை என்றும், உங்கள் தந்தைக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் உங்கள் அப்பாவை நீங்கள் தான் சென்று தூக்கினேன் என்று கூறியிருப்பீர்கள் என்றும், சம்பவ இடத்தில் இல்லாததால் தான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. உங்களை போலிசார் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து 15.09.2022 அன்று விசாரித்தார்கள். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor